மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# குறுந்தொகையில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு

# The Usage of Kutriyalukaram in Kuruntokai

முழுமதி ரவிச்சந்திரன் / Mulummathi Ravichandran[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M. A. R. Annamalai[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

Date of Submission: 20-05-2026
Date of Acceptance: 30-05-2026
Date of Publication: 30-06-2026
Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை, தமிழ்மொழியின் இலக்கிய மற்றும் இலக்கணச் செழுமையை வெளிப்படுத்தும் முக்கிய நூலாகும். இவ்வாய்வு குறுந்தொகையில் இடம்பெறும் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வு பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். ஆய்வுக் கண்டுப்பிடிப்பானது குறுந்தொகைப் பாடல்களில் காணப்படும் குற்றியலுகரச் சொற்கள் தொகுக்கப்பட்டு, தொல்காப்பிய இலக்கண விதிகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அவற்றில், குற்றியலுகரச் சொற்கள் குறுந்தொகையில் அதிகமான அளவில் காணப்படுகிறது என்பதே இந்த ஆய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வு, குறுந்தொகையில் வரும் குற்றியலுகரத்தின் பயன்பாட்டை அறிந்து கொள்ள உதவி செய்கிறது.

**கருச்சொற்கள் :** குறுந்தொகை, குற்றியலுகரம், சங்க இலக்கியம், தொல்காப்பியம், இலக்கணம்

**Abstract**


Kuruntokai, one of the anthologies of the Ettuthokai collection in Sangam literature, is an important work that reflects the literary and grammatical richness of the Tamil language. This study aims to examine the usage of Kutriyalukaram (short "u" phonological form) in Kuruntokai. The research was conducted using a qualitative approach. The findings were obtained by identifying and compiling the words containing Kutriyalukaram from the poems of Kuruntokai and analyzing them based on the grammatical principles outlined in the Tolkappiyam. The analysis reveals that words containing Kutriyalukaram occur extensively throughout Kuruntokai. This study contributes to a better understanding of the grammatical significance and usage of Kutriyalukaram in Kuruntokai, thereby highlighting the linguistic richness of Sangam literature.

**Keywords :** Kuruntokai, Kutriyalukaram, Sangam literature, Tolkappiyam, Tamil grammar

**முன்னுரை**

இலக்கியங்கள் மனித வாழ்வின் உன்னத நிலையை அடைவதற்குத் தேவையான உயரிய நெறிமுறைகளைக் காலந்தோறும் பதிவு செய்து கொண்டே வருகின்றன. அவ்வகையில், தமிழர்களின் உயரிய நாகரிக விழுமியங்களைச் சங்க இலக்கியங்கள் தெளிவுற எடுத்துரைக்கின்றன (ஆதீஸ்வரி, 2025). சங்க இலக்கியங்கள் அக வாழ்வு (காதல், குடும்பம்), புற வாழ்வு (வீரம், கொடை, அரசியல்) ஆகியவற்றைப் பிரித்து ஆராய்ந்த போதிலும், இவ்விரு வாழ்வியல் தளங்களின் அடிப்படையாக விளங்குவது அறம் என்னும் தூய தத்துவமேயாகும். உரையாசிரியர்களால் பெரிதும் எடுத்தாளப்பட்ட அக நூலானது குறுந்தொகை. குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. எட்டுத்தொகை நூல்களில் “நல்” என்ற அடைமொழியைப் பெற்ற ஒரே நூல் குறுந்தொகையே ஆகும் (மகாதேவன், 2013). குறைந்த அடிகள் கொண்ட பாடல்களில் தொகுப்பாக இருப்பதால் இது குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. 401 பாடல்களை உடையதாக இவ்விலக்கியம் அமைகிறது. 201 புலவர்கள் பாடியிருக்க இந்நூலைப் பூரிக்கோ தொகுத்தார். 380 பாடல்களுக்குப் பேராசிரியரும், எஞ்சிய 20 பாடல்களுக்கு நச்சினார்கினியரும் உரை வகுத்தனர்.

தொடர்ந்து, தொல்காப்பியர் கூற்றுப்படி தமிழில் மொத்தம் மூன்று சார்பெழுத்துகள் உள்ளன. அதில் ஒன்றுதான் குற்றியலுகரம். குற்றியலுகரம் என்பது குறுமை + இயல் + உகரம்> குறு + இயல் + உகரம் = குற்றியலுகரம் என்று புணர்ந்து உருவான சொல். குறுகிய இயல்புடைய உகரம் என்பது இதன் பொருள். தனிநெடிலுக்குப் பிறகும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களுடைய சொல்லின் இறுதியிலும் வருகிற, கு, சு, டு, து, பு, று என்ற வல்லின மெய்யுடன் சேர்ந்த உகர ஒலிகள் அரை மாத்திரையளவே ஒலிக்கின்றன. அஃதாவது இயல்பான உகர உயிரின் ஒலிப்பில் பாதியளவே ஒலிக்கின்றன. இதனால், இவை ஒரு மாத்திரை உடைய முழு உகரங்கள் அல்ல என்பதை உணர்த்துவதற்காகக் குற்றியலுகரம் எனப்படுகின்றன. இவை இடஞ்சார்ந்து ஒலிப்பதால் இடஞ்சார்ந்தே அறியப்படுகின்றன. இவற்றுக்குத் தனி வரிவடிவம் இல்லை. குற்றியலுகரத்தின் வல்லின மெய்யொலி அதன் ஈற்றயல் (இறுதிக்கு முந்திய) ஒலியன் பாதிப்பால் வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டின் அடிப்படையில் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.




வரைபடம் 1: சிந்தனை வரைபடம் ஆறு வகை குற்றியலுகரங்களைக் காண்பிக்கின்றது

**வன்றொடர்க் குற்றியலுகரம்**

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து வல்லின மெய்யானால் இந்த வல்லின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுரமும் சேர்ந்து வன்மையாக ஒலிக்கின்றன. எனவே, வல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்பெற்றது. எடுத்துக்காட்டாக, அச்சு - ச்சு என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம்.

**மென்றொடர்க் குற்றியலுகரம்**

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து மெல்லின மெய்யானால், இந்த மெல்லின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து மென்மையாக ஒலிக்கின்றன. எனவே, மெல்லின மெய்யைத் தொடர்ந்து

வரும் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்பெற்றது. எடுத்துக்காட்டாக, கன்று - ன்று என மெல்லின மெய்யைத் தொடர்ந்ததால் மென்றொடர்க்குற்றியலுகரம்.

### இடைத்தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்திற்கு முந்திய எழுத்து இடையின மெய்யானால், இந்த இடையின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. எனவே, இடையின மெய்யைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. எடுத்துக்காட்டாக, அமிழ்து - ழ்து என இடையினமெய்யைத் தொடர்ந்ததால் இடைத்தொடர்க்குற்றியலுகரம்.

### உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து உயிர்மெய்யானால் இந்த உயிர்மெய்யிலுள்ள உயிரும் வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. இங்கு ஈற்றயலாக வருவது உயிர்மெய் என்றாலும் அதிலுள்ள உயிரே குற்றியலுகரத்துக்கு முந்தியதாகிறது. எடுத்துக்காட்டாக, கயிறு> க + யி (ய்+இ) று என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

### நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்துத் தனிநெடிலானால், அஃது உயிர் என்பதைவிட, நெடில் என்பதே கருதப்படும். ஈற்றயலாக வரும் நெடில், உயிராகவோ உயிர்மெய்யாகவே இருக்கலாம். இந்த நெடிலில், குற்றியலுகரத்துக்கு முந்தியிருப்பது உயிர் என்பதால் இஃது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகக் கொள்ளப்பட வேண்டியதேயாகும். ஆயினும், இந்தச் சொல் இரண்டே எழுத்துகளைக் கொண்டதாய் இருப்பதால், இதன் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரமாக ஒலிப்பதற்குக் காரணமாக அமைவதே, அதற்கு முந்தியிருக்கும் தனிநெடிலாக இருப்பதுதான். எடுத்துக்காட்டாக, கூடு – கூ (தனிநெடில்) + டு உகரம் தனிநெடிலுக்குப் பின் வந்ததால் இது நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

### ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து, ஆய்த எழுத்தானால், இந்த ஆய்தமும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. எனவே, ஆய்தத்தைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. எடுத்துக்காட்டாக, இஃது - ஃது என ஆய்தத்தைத் தொடர்ந்ததால் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

### ஆய்வின் நோக்கம்

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் உள்ள குற்றியலுகரம் பயன்பாட்டினைக் கண்டறிந்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். ஆய்வாளர் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள குற்றியலுகரம் கண்டறிந்து அதற்கேற்ப இலக்கண விதியைக் கண்டறிந்து விளக்குதல் ஆகும்.

### ஆய்வின் வரையறை

குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள அகத்திணைப் பாடல்கள் ஐந்திணை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், குறிஞ்சித்திணை சார்ந்த 124 பாடல்கள் இடம்பெற்று, அவை புணர்ச்சியும் புணர்ச்சி நிமித்தமும் என்னும் உரிப்பொருளை வெளிப்படுத்துகின்றன. முல்லைத்திணையில் 31 பாடல்கள் காணப்பட்டு, இருத்தலும் இருத்தல் நிமித்தமும் மையமாக அமைகின்றன. மருதத்திணையில் 39 பாடல்கள் இடம்பெற்று, ஊடலும் ஊடல் நிமித்தமும் விளக்கப்படுகின்றன. நெய்தல்திணையில் 34 பாடல்கள் இடம்பெற்று, இரங்கலும் இரங்கல் நிமித்தமும் சித்தரிக்கப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் 169 பாடல்களுடன் பாலைத்திணை அமைந்து, பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்னும் உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. ஆய்வாளரால் இந்த ஆய்வுக்குத் தொடர்புள்ள 20 பாடல்கள் மட்டுமே உட்படுத்தி

ஆராயப்பட்டுள்ளது. இலக்கணக் கூறுகளில் குற்றியலுகரம் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.

**ஆய்விலக்கிய மீள்நோக்கு**

சங்க இலக்கியங்கள், தமிழ் இலக்கணக் கூறுகள் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாகக், சங்க இலக்கியங்களில் குற்றியலுகரப் பயன்பாடும் சங்க இலக்கியமான குறுந்தொகையில் காணப்படும் பல்வேறு கூறுகள் தொடர்பான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. கோகிலா ஸ்ரீராமன், முனிஸ்வரன் குமார் (2025), 'மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு' என்கிற ஆய்வில், மூதுரையில் காணப்படும் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டை ஆய்ந்துள்ளனர். அடுத்து, தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். மேலும், ஜெயஸ்ரீ சுப்பிரமணியம், மனோன்மணி தேவி அண்ணாமலை (2025), 'திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு எனும் ஆய்வில் திருக்குறளில் காணப்படும் குற்றியலுகரப் பயன்பாடு கண்டறிந்து ஆராயப்பட்டுள்ளது. தொடர்ந்து, கௌசல்யா லட்சுமி (2023), 'சங்கக்கால அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகள்' எனும் ஆய்வில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய சங்கக்கால இலக்கிய நூலில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகளை இந்த ஆய்வில் விளக்கியுள்ளார்.

ஆய்வாளர் சங்க இலக்கியமான குறுந்தொகையை மையப்படுத்தி ஆயப்பட்ட சில ஆய்வினைகளையும் மீள்நோக்காகக் கொண்டுள்ளார். எடுத்துக்காட்டாக, கி.ராம்கணேஷ், (2026) 'குறுந்தொகை காட்டும் பண்பாட்டுக் கூறுகள்' எனும் ஆய்வில் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் ஆராயப்பட்டுள்ளது. மேலும், செ. சத்யா, (2021) 'குறுந்தொகையில் உள்ளுறை – இறைச்சி' என்ற ஆய்வில் தொல்காப்பியரால் குறிப்புப் பொருளாக சுட்டப்படும் உள்ளுறை, இறைச்சி ஆகியவை ஆயப்பட்டுள்ளது. அ. ஆத்தீஸ்வரி, (2025) மேற்கொண்ட ஆய்வின் தலைப்பானது 'குறுந்தொகை காட்டும் வாழ்வியல் அறங்களின் பன்முகப் பரிமாணங்களும் சமகாலப் பொருத்தப்பாடும்: ஓர் அக-புற ஆய்வு' ஆகும். இந்த ஆய்வில் குறுந்தொகை பாடல்களில் கானப்படும் வாழ்வியல் அறங்கள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, கண்மனி ராஜசெல்வி, (2021) 'குறுந்தொகை பாடல்களில் உளவியல் பார்வை' எனும் இவ்வாய்வில் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள உளவியல் கருத்துகள் முறையாக ஆராயப்பட்டுள்ளது. 2022-ஆம் ஆண்டு வெளிவந்த அ.தமயந்தி , வே. அ. பழனியப்பன் அவர்களின் ஆய்வானது 'குறுந்தொகையில் வாழ்வியல் சிந்தனைகள்' என்ற ஆய்வில் குறுந்தொகை பாடல்களில் காணப்படும் வாழ்வியல் சிந்தனைகள் இக்காலத்துடன் ஒப்பிட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

குறுந்தொகையில் இடம்பெறும் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டை மட்டும் மையப்படுத்தி ஆராயும் முயற்சிகள் குறைவாகக் காணப்படுகின்றன. எனவே, இவ்வாய்வில் ஆய்வாளர் குறுந்தொகையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டை ஆராய்ந்துள்ளார்.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்கு தேவையான நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் தெரிவு செய்யப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவு சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு நிரல்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்**

**அ) வன்றொடர்க் குற்றியலுகரம்**

i. <u>முட்டு</u> வேன்கொல்? <u>தாக்கு</u> வேன்கொல்?
ஒரேன், யானும்; ஓர் பெற்றி <u>மேலிட்டு</u>
ஆ, அ, ஒல்எனக் கூவு வேன்கொல்?
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே

இப்பாடலில் முதல் அடியில் முட்டு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ட்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'டு' என்ற உகரம் வருகிறது. மேலும், இப்பாடலில் முதல் அடியில் தாக்கு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. அடுத்து, இப்பாடலின் இரண்டாம் அடியில் மேலிட்டு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ட்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'டு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

ii. நெறியிருங் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றோர்
அறிவர்கொல் வாழி-தோழி! - பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
நரை உரும் உரறும் அரையிருள் நடுநாள்
நல்லேறு இயங்குதோறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒருமணிக் குரலே?

இப்பாடலில் இரண்டாம் அடியில் செய்பொருட்கு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ட்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. மேலும், இப்பாடலில் ஏழாம் அடியில் தொழுவத்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'த்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

iii. பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே; நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால்; நோகோ யானே

இப்பாடலில் மூன்றாம் அடியில் பைம்புனத்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'த்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. மேலும், இப்பாடலில் இறுதி அடியில் பெருவிதுப்பு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ப்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'பு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

**ஆ) மென்றொடர் குற்றியலுகரம்**

i. நள்ளென் றன்றே, யாமம்; சொல் அவிந்து
இனிது அடங் கினரே, மாக்கள்; முனிவுஇன்று,
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

இப்பாடலில் முதலாம் அடியில் அவிந்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. மேலும், இப்பாடலில் இரண்டாம் அடியில் முனிவுஇன்று எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

ii. அளிதோ தானே; நாணே; நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே; இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துஉக் காஅங்கு
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.

இப்பாடலில் இரண்டாம் அடியில் உழந்தன்று எனும் சொல்லைப் பிரித்தால் உழந்து + அன்று என்றாகும். இதில் உழந்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. மேலும், அன்று எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. அடுத்து, இப்பாடலில் நான்காம் அடியில் வீய்ந்து, அங்கு எனும் சொற்கள் இடம்பெற்றுள்ளன. வீய்ந்து எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. அதுமட்டுமல்லாமல், அங்கு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ங்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் அனைத்தும் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

iii. பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே?
ஒருநன்று உடையள் ஆயினும், புரிமாண்டு
புலவி தீர அளிமதி...
நன்மலை நாட! நின் அலது இலளே.

இப்பாடலில் முதலாம் அடியில் பெருநன்று எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. மேலும், இப்பாடலின் இரண்டாம் அடியில் ஒருநன்று, புரிமாண்டு எனும் சொற்கள் இடம்பெற்றுள்ளன. ஒருநன்று எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. அதுமட்டுமல்லாமல், புரிமாண்டு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ண்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'டு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் அனைத்தும் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

### இ) இடைத்தொடர் குற்றியலுகரம்

i. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமியன் வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்த
லினமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் காப்பா டும்மே

இப்பாடலில் ஆறாம் அடியில் மூழ்கு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ழ்' என்ற இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

ii. அமிழ்துபொதி செந்நா வஞ்சி வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் லம்ம யானே! பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே! மறுகி
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயாஅ நாணுகஞ் சிறிதே.

இப்பாடலில் முதலாம் அடியில் அமிழ்து எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ழ்' என்ற இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

iii. பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி ஆய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

இப்பாடலில் முதலாம் அடியில் கொள்பு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ள்' என்ற இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'பு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

### ஈ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

i. கொன்ஊர் துஞ்சினும் யாம்துஞ் சலமே;
எம்இல் அயலது ஏழில் உம்பர்
மயில் அடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

இப்பாடலில் இரண்டாம் அடியில் அயலது எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ல' என்ற ல்+அ என்பதில் 'அ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்துள்ளது. மேலும், இப்பாடலின் நான்காம் அடியில்

அணிமிகு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'மி' என்ற ம்+இ என்பதில் 'இ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'கு' என்ற உகரம் வந்துள்ளது. ஆகவே, இச்சொற்களானது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆயிற்று.

ii. முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி; வினவுவது உடையேன்;
பல்வேறு உருவின் சில் அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தியாயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே.

இப்பாடலில் முதலாம் அடியில் முருகு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ரு' என்ற ர்+உ என்பதில் 'உ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'கு' என்ற உகரம் வந்துள்ளது. மேலும், இப்பாடலின் இரண்டாம் அடியில் வினவுவது எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'வ' என்ற வ்+அ என்பதில் 'அ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்துள்ளது. அடுத்து, இப்பாடலில் மூன்றாம் அடியில் மடையொடு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'யொ' என்ற ய்+ஒ என்பதில் 'ஒ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'டு' என்ற உகரம் வந்துள்ளது. ஆகவே, இச்சொற்களானது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆயிற்று.

iii. தொல்கவின் தொலைந்து தோள்நலம் சாஅய்
அல்லல் நெஞ்சமோடு அல்கலும் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொலலோ..
விலங்குதிரை உடைதரும் துறைவனொடு
இலங்குஎயிறு தோன்ற நக்கதன் பயனே.

இப்பாடலில் இரண்டாம் அடியில் நெஞ்சமோடு எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'மோ' என்ற ம்+ஓ என்பதில் 'ஓ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'டு' என்ற உகரம் வந்துள்ளது. மேலும், அதே அடியில் துஞ்சாது எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'சா' என்ற ச்+ஆ என்பதில் 'ஆ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்துள்ளது. அடுத்து, இப்பாடலில் மூன்றாம் அடியில் விளிவது எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'வ' என்ற வ்+அ என்பதில் 'அ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்துள்ளது. எயிறு எனும் சொல் இறுதி அடியில் இடம்பெற்றுள்ளது. இச்சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'யி' என்ற ய்+இ என்பதில் 'இ' எனும் உயிரெழுத்தை அடுத்து 'று' என்ற உகரம் வந்துள்ளது. ஆகவே, இச்சொற்களானது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆயிற்று.

**உ) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்**

i. நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல்அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!
ஆரளி இலையோ நீயே; பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை;
துணையிலர் அளியர் பெண்டிர் இஃது எவனே?

இப்பாடலில் இறுதி அடியில் இஃது எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ஃ' என்ற ஆய்த எழுத்தைத் தொடர்ந்து உகர எழுத்தான 'து' வந்துள்ளது. ஆகவே, இஃது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாகும்.

ii. காமம் தாங்குமீதி என்போர் தாம்அஃது
அறியலர் கொல்லோ? அனைமது கையர்கொல்?
யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்ஆ குதுமே.

இப்பாடலில் முதலாம் அடியில் அஃது எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ஃ' என்ற ஆய்த எழுத்தைத் தொடர்ந்து உகர எழுத்தான 'து' வந்துள்ளது. ஆகவே, இஃது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாகும்.

**ஊ) நெடிற்றொடர்க் குற்றியலுகரம்**

i. ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றினென்

நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனின் போகி யோனே;
ஆசு ஆகு எந்தை-யாண்டுஉளன் கொல்லோ?
வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலிழும்எம் நெஞ்சே.

இப்பாடலின் ஐந்தாம், ஆறாம், ஏழாம் அடிகளில் நெடிற்றொடர் குற்றியலுகரம் காணப்படுகின்றது. ஐந்தாம் அடியில் ஆசு எனும் சொல்லில் தனிநெடிலுக்குப்பின் உகரம் வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஆசு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ஆ' என்ற தனிநெடிலைத் தொடர்ந்து 'சு' என்ற உகரம் வருகிறது. அடுத்து, ஆகு எனும் சொல்லின் தனிநெடிலுக்குப்பின் உகரம் வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஆகு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ஆ' என்ற தனிநெடிலைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. ஆறாம் அடியிலும், வேறு எனும் சொல்லில் ஈற்றுக்கு அயல் எழுத்து 'வே' என்ற தனிநெடிலைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. இறுதி அடியில் ஏறு எனும் சொல்லில் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ஏ' என்ற தனிநெடிலைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. அதுமட்டுமல்லாமல் இச்சொற்களை அனைத்தும் இரு எழுத்துகளை மட்டுமே கொண்டுள்ளன. எனவே, இச்சொற்கள் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

**முடிவுரை**

இந்த ஆய்வின் வழி குறுந்தொகையிலுள்ள 15 பாடல்களிலும் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு சான்றுகளுடன் பகுப்பாய்ந்து குறிப்பிடப்பட்டுள்ளன. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள 15 பாடல்களிலும் குற்றியலுகரப் பயன்பாடு அடையாளங்காணப்பட்டு மக்கள் பயனுறும் பொருண்மையைத் தெளிவாக விளக்கியுள்ளார் என்பது திண்ணம். தலைவன் தலைவியின் காதல், ஊடல் போன்றவற்றை 15 பாடல்களில் அழகாக ஏவியுள்ளார். மக்கள் பின்பற்றுவதற்கான இந்தக் குற்றியலுகர இலக்கணத்தைச் செம்மையாகப் பயன்படுத்தியுள்ளார் என ஆய்வு புலப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**


அ.தமயந்தி, வே.அ.பழனியப்பன். (2022). குறுந்தொகையில் வாழ்வியல் சிந்தனைகள், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol. 4 Iss. S-18. DOI: 10.34256/irjt224s1814

ஆத்தீஸ்வரி, அ. (2025). குறுந்தொகை காட்டும் வாழ்வியல் அறங்களின் பன்முகப் பரிமாணங்களும் சமகாலப் பொருத்தப்பாடும்: ஓர் அக-புற ஆய்வு, தமிழ்மணம் சர்வதேசத் தமிழாய்விதழ், 6(சிறப்பிதழ் 02), 55–63.

கண்மணி ராஜசெல்வி. (2021). குறுந்தொகை பாடல்களில் உளவியல் பார்வை, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol. 3 Iss. SPL 1 DOI: 10.34256/irjt21s139

கி.ராம்கணேஷ். (2026). குறுந்தொகை காட்டும் பண்பாட்டுக் கூறுகள். தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol.7(2). DOI: https://doi.org/10.63300/tm09012026.29

கோகிலா ஸ்ரீராமன், முனிஸ்வரன் குமார். (2025). மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு, மலேசியத் தமிழ் ஆய்விதழ், Vol. 3(1), 13-25.

கௌசல்யா லட்சுமி ஜெய்சங்கர். (2023). சங்கக்கால அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகள், மலேசியத் தமிழ் ஆய்விதழ், eISSN:2990-9694.

செ. சத்யா. (2021). குறுந்தொகையில் உள்ளுறை – இறைச்சி, Muallim Journal of Social Sciences and Humanities, Vol.5(4). DOI: https://doi.org/10.33306/mjssh/157

செ. சீனி நைனா முகம்மது. (2013). நல்ல தமிழ் இலக்கணம். உங்கல் குரல் எண்டர்பிரைசு

திருக்கண்ணபுரத்தான் திருமலைச்செல்வப் பெருமாளரங்கன். குறுந்தொகை மூலமும், புத்துரையும். ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆசிரமம்.

மு.வரதராசன். (1956). குறுந்தொகை விருந்து. பாரி நிலையம்.

ஜெயஸ்ரீ சுப்பிரமணியம், மனோன்மணி தேவி அண்ணாமலை. (2025). திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு, மலேசியத் தமிழ் ஆய்விதழ், Vol. 3(1), 40-47.